**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.47/2021**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சூரியராஜ்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சங்கத்தேவர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கண்டுகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி செல்வம் எனது மாமா ஆவார். அவருக்கும் எனக்கும் சமாதானமாக சென்றுவிட்டோம். வழக்கு பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

கடந்த 22.05.2016ம் தேதி மாலை 3.00 மணிக்கு எனது பக்கத்து வீட்டுக்காரான சசிக்கலா என்பவர் என்னிடம் வந்து எனது அம்மா நாச்சார் அம்மாவை எனது மாமா செல்வம் அடித்துக் கொண்டிருப்பதாக சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்த போது எனது அம்மாவை எதிரி கையால் அடித்துக் கொண்டிருந்தார். அதை நான் தடுத்த போது என்னையும் தகாத வார்த்தைகளால் பேசி அடித்தார் என்றும் கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் அதில் எனக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் என்னை திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும் பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் சிகிச்சையில் இருந்த போது திருமங்கலம் தாலுகா காவல் போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும் அவர்களிடம் புகார் மனு அளித்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது மாமா என்பதாலும் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டபடியாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி,**இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM
## Case No:CC.47/2021
## Prosecution Witnesses : 2

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : பரமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(03.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கண்டுகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தறி வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் வெளியூரில் வேலை பார்த்து வருகிறேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது அண்ணன் ஆவார். பெரியப்பா பையன் ஆவார். அ.சா.1 எனக்கு என்ன உறவு என்றால் மாமா ஆவார். அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே சொத்துதகராறு இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 22.05.2016ம் தேதி மாலை 3.00 மணிக்கு எம்.ஜி.ஆர் சிலை முன்பு எதிரி அங்கு நின்றிருந்த நாச்சியார் என்பவரை பலர் பார்க்க கையால் அடித்தார் என்றும் அதை அ.சா.1 தடுக்க முற்பட்ட போது அ.சா.1 யும் நாச்சியாரையும் எதிரி தகாத வார்த்தைகளால் பேசி அடித்து கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் எதிரி

இரும்பு கொக்கியால் அ.சா.1 ஐ காயப்படுத்தினார் என்றும் காயமடைந்த அ.சா.1 ஐ திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதாலும் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டபடியாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை